**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,**
**ARIYALUR**

| | | |
|---|---|---|
| R.W.– 2 பிரசாத்<br>S/o.பரமசிவம் | MCOP No.42/2025 | 08.07.2026. |

(சாட்சி ஆஜர், சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறது)

**<u>முதல் விசாரணை</u>**

நான் இம்மனுவில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு இரண்டாவது சாட்சி. எனது தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதை எனது தரப்பு முதல் விசராணையாக ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு எங்கள் அலுவலகம் வழங்கியிருந்த காப்பீடு மற்றும் காப்பீட்டு நிபந்தனைகளின் அலுவலக நகல் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எங்கள் காப்பீட்டு நிறுவனம் வாயிலாக 1ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்ட கடிதம் எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கடிதத்தை 1ம் எதிர்மனுதாரர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்து பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். விபத்து சம்பந்தமாக 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மீது தான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு காப்பீடு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்துடன் ஒரு டிரெய்லரும் இணைந்து சென்றது என்றால் சரிதான். டிாக்டர் இல்லாமம் டிரெய்லர் தனியாக

இயங்கமுடியாது என்றால் சரிதான். விவசாய நிலங்களில் மேற்கொள்ளப்படும் கட்டுமானங்களுக்கு கல், மணல் எல்லாம் ஏற்றிச் செல்லலாம் என்று சொன்னால் அது விதிமுறை மீறல்களுக்கு உட்பட்டது. 1ம் எதிர்மனுதாரர் எங்களிடம் செய்து கொண்ட காப்பீட்டு விதிமுறை மீறல்களுக்கு எதிராக நடந்துள்ளார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர்களை பொறுத்த வரை விபத்திற்குள்ளான நபர் 3ம் தரப்பினர் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் விவசாயத்திற்காகத்தான் பொருட்களை ஏற்றிச் சென்றுள்ளார் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த நபர் 3ம் நபர் என்பதால் 1ம் எதிர்மனுதாரரின் காப்பீட்டாளர் என்ற முறையில் மனுதாரருக்கு தாங்கள் இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

**<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு உள்ளது, ஆனால் புதுப்பிக்கப்படாமல் உள்ளது என்றால் சரியல்ல. விவசாய பயன்பாடு அல்லாமல் கட்டிட வேலைகளுக்காக விபத்து ஏற்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் டிராக்டர் பயன்படுத்தப்பட்டுள்ளது என முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சிமெண்ட் லோடு ஏற்றி வந்ததாக சொல்லப்பட்டுள்ளது. விவசாய பயன்பாடு அல்லாமல் என்று குறிப்பிட்டு முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சொல்லப்படவில்லை. தங்கள் நிறுவனம் காப்பீடு கொடுக்காமல் நிராகரிக்க வேண்டும் என்பதற்காக விவசாய பயன்பாடு அல்லாமல் என்ற வார்த்தையை பயன்படுத்தி நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளது என்றால் சரியல்ல. டிராக்டரின் முன் பகுதி மோதி தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் மேற்படி வாகனத்திற்கு தகுதி சான்று இருந்து என்றாலும், ஆனால் எந்த ஆவணங்களையும் பார்வையிடாமல் வட்டார போக்குவரத்து அலுவலரிடம் மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதன் காரணமாகத்தான் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில்

இரண்டு வாகனங்களுக்கும் ஒன்றுபோலவேத்தான் அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை.

சாட்சியின் கையொப்பம்: sd./– பிரசாத்

நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சியை விசாரித்து தட்டச்சரால் அடிக்கப்பட்டு சாட்சியிடம் வாக்குமூலத்தை படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி ஒப்புதல் அளிக்கப்பட்டு என்னால் சரிபார்த்து கையெழுத்திடப்பட்டது.

V DEEPA

Digitally signed by V DEEPA
Date: 2026.07.08 10:56:59 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
அரியலூர்.